பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 18 வெள்ளிக்கிழமை 02.07.2021 கதிர் 105

## மேலும் சில இடங்கள் தனிமைப்படுத்தலில்

நாட்டில் மேலும் சில பிரதேசங்கள் இன்று காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி இரத்தினபுரி, கம்பஹா, 2

# எவரையும் தவிர்த்து விட்டுப் பயணிக்கும் எந்தவித தேவையும் எமக்குக் கிடையாது

## அனைத்து சிறு கட்சிகளையும் இணைத்தே தேர்தல் சீர்திருத்தம் அணுகப்படும் என்கிறார் மனோ

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் கூட்டுச் செயற்பாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உட்பட உடன்படும் அனைத்து சிறு கட்சிகளும் இணைத்துக்கொள்ளப்படும். எவரையும் தவிர்த்து விட்டுப் பயணிக்கும் எந்தவித தேவையும் கிடையாது.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டமையால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உட்பட ஏனைய கட்சிகள் அழைக்கப்படவில்லை. மேலும், இன்றைய விகிதாசார முறைமை தொடர்ந்து பேணப்படுவதை, பொது நன்மை கருத்தை தாமும் ஆதரிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ எம்.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் உறுதியளித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறு கட்சிகளின் தேர்தல் சீர்திருத்த பேச்சில் 2



## ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இழக்கப்படும் ஆபத்தையடுத்து

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகளை மீளாய்வு செய்யத் தயாராகின்றது இலங்கை

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் தெரியப்படுத்தியது அரசு

**(இ.கலையமுதன்)**

**பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் நல்லிணக்கத்தின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை விளக்கமளித்துள்ளது. இதன்படி தற்போதுள்ள சட்டங்கள், கடந்தகால நடைமுறைகள் மற்றும் சர்வதேச நடைமுறைகள் குறித்து ஆய்வு செய்தல் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகளை மறு பரிசீலனை செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஜூன் 25 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அறிவிக்கப்பட்டது என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.** 2

## 60 தமிழ் அரசியல் கைதிகளின் விவரம் அடங்கிய கடிதங்கள் 225 எம்.பிக்களுக்கும் அனுப்பிவைப்பு

**(இ.கலையமுதன்)**

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 60 பேரின் விவரங்கள் அடங்கிய கடிதங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குரலற்றவர்களின் குரல் அமைப்பால் இந்த கடிதங்கள் இன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ். பிரதான தபாலகத்திலிருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டன.

இதன்பின்னர் குரலற்றவர்களின் 2




## புதிய சுகாதார ஒழுங்கு விதிகளை வெளியிட சுகாதார அமைச்சு தயார்



நாடு முழுவதும் அமுலாகும் வகையில் கொரோன தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான புதிய சுகாதார ஒழுங்கு விதிகள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சு வெளியிடவுள்ளது.

கடந்த மே 21 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடு ஜூன் 2

## சபையை இழந்தது 'யானை' மலர்ந்தது 'தாமரை மொட்டு'

திருகோணமலை மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழிருந்த சேருவில பிரதேச சபையின் அதிகாரத்தை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கைப்பற்றிக் கொண்டது.

கடந்த 7 மாதங்களாக இயங்காத நிலையிலிருந்த இந்தச் சபைக்கு, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, புதிய தவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான பிரேரணை இன்று முன்வைக்கப்பட்டு, வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது சபையின் புதிய தவிசாளராக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் டப்ளியு.ஏ.ஜயசிரி, 3 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். இதனூடாக, இந்தச் சபையின் அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி இழந்தது.

மொத்தம் 15 உறுப்பினர்களைத் கொண்ட 2

## மேலும் 50 ஆயிரம் தடுப்பூசிகள் நாளை யாழ்.குடாநாட்டுக்கு

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களுக்காக அடுத்தகட்டமாக, மேலும் 50 ஆயிரம் 'சினோபோர்ம்' கொரோனாத் தடுப்பூசிகள் நாளை எடுத்துவரப்படவுள்ளன.

இவை, கொரோனாத் தொற்று அதிகமுள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இரண்டாம் கட்டத் தடுப்பூசி வழங்கும் 2

## மேலும் 10 லட்சம் டோஸ் 'சினோபார்ம்' தடுப்பூசிகள்

### இன்று வந்தன இலங்கைக்கு

சீனாவில் இருந்து மேலும் 10 இலட்சம் டோஸ் 'சினோபார்ம்' தடுப்பூசிகள் இலங்கை வந்தடைந்துள்ளன.

சீனாவின் பீஜிங்கில் இருந்து இன்று 2



## மேலும் சில இடங்கள்.................

(முதலாம் பக்க தொடர்ச்சி)

கொழும்பு மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 5 பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, கம்பஹா மற்றும் மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாட்டுவாகல தோட்டத்தின் மேற்பிரிவு, கம்பஹா மாவட்டத்தின் வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெந்தல வடக்கு கிராம சேவகர் பிரிவின் ஓலந்த கிராமம் மற்றும் வத்த தோட்டம், கொழும்பு மாவட்டத்தின்நுகேகொடை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஒபேசேகரபுர (514 சி) கிராம சேவகர் பிரிவு, நுவரெலியா மாவட்டத்தின் பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டியாகல தோட்டத்தின் கீழ்ப் பிரிவு ஆகிய பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தின் பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டிஹேன கிராம சேவகர் பிரிவின் பொல்ஹேன வீதி, லேக்வீவ் வீதி, முதலீட்டு சபை வீதி (வாவி வீதி சந்திவரையான பகுதி) தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே அம்மாவட்டத்தின் மீகஹவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சியாம்பலாபே கிராம சேவகர் பிரிவின் தேவாலய வீதி, ஆரியதாச விதானகே மாவத்தை, ஆரியதாச விதானகே மாவத்தையின் முடிவிடம், சியம்பலாபேவத்த கந்துபொட வீதி ஆகிய பகுதிகளும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாத்தளை மாவட்டத்தின் மஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெமதஓய (ஈ 417/ஏ) கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## எவரையும் தவிர்த்து.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஏன் அழைக்கப்படவில்லை என்ற சர்ச்சை தொடர்பில் கருத்துக் கூறிய மனோ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இன ரீதியான சிறு கட்சிகளும், அரசியல் ரீதியான சிறு கட்சிகளும் தேர்தல் சீர்திருத்தம் என்ற பொதுப் பிரச்சினையைக் கூட்டாகவே எதிர்கொள்ள வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் நண்பர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பியுடன் பேசுகின்ற அதேவேளை, நானும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பியும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ எம்.பியுடனும் இது தொடர்பில் பேசியுள்ளோம்.

இன்றைய விகிதாசார முறைமையே எமது பொது நிலைப்பாடு என நாம் அவருக்குக் கூறியபோது, சஜித் பிரேமதாஸ எம்.பி., தான் இன்றைய விகிதாசார முறைமைக்கு முழு ஆதரவு தருவதாக எமக்கு உறுதியளித்துள்ளார். இது தொடர்பாக தமது கட்சி பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்பியை அழைத்து அறிவுறுத்தல் வழங்கினார்.

அதேபோல், தேர்தல் சீர்திருத்த பேச்சு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களுடனும் நான் நேரடியாகப் பல முறை பேசியுள்ளேன். வடக்கு மாகாணத்தில் புதிய கலப்பு முறைமை தமக்குச் சாதகமாக அமையக்கூடிய வாய்ப்புகள் இருந்தாலும், நாடு முழுக்க சிதறி வாழும், தமிழ், முஸ்லிம் மக்களின் நன்மை கருதி தாமும் இன்றைய விகிதாசார முறைமை தொடர்ந்து பேணப்படுவதை ஆதரிக்கத் தயார் என கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. என்னிடம் உறுதியளித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களும் இத்தகைய நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர் என்று நான் அறிந்துள்ளேன் - என்றார்

## புதிய சுகாதார ஒழுங்கு...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

21 ஆம் திகதி தளர்த்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மக்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார ஒழுங்குவிதிகள் அடங்கிய சுற்றறிக்கையை சுகாதார அமைச்சு வெளியிட்டதுடன் அது ஜுலை 5 ஆம் திகதி வரையில் அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பாக மீளாய்வு செய்து எதிர்வரும் 5ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் புதிய ஒழுங்குவிதிகள் அடங்கிய சுற்றறிக்கையை வெளியிடவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அதனைத் தயாரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் கூறினார்.

## மேலும் 10 லட்சம்......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

அதிகாலை இவை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இவை விசேட வாகனம் மூலம் கொழும்பிலுள்ள மத்திய தடுப்பூசி களஞ்சியத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள முதல் தொகுதி 'பைஸர்' தடுப்பூசிகள் எதிர்வரும் திங்கட்கிழமை நாட்டை வந்தடையவுள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பயங்கரவாதத்.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வு செய்து அது தொடர்பான அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை துணைக்குழு மற்றும் அதிகாரிகள் குழுவை நியமிக்கவென ஜூன் 21ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இதன்போது விளக்கமளிக்கப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற மற்றும் தண்டனை அனுபவித்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 16 பேருக்கு, அரசமைப்பின் 34ஆவது பிரிவின் படி ஜூன் 24ஆந் திகதி ஜனாதிபதி வழங்கிய பொதுமன்னிப்பு குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தெளிவுபடுத்தப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், தற்போதைய நல்லிணக்க வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், இழப்பீட்டு அலுவலகத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விளக்கமளிக்கும் குறித்த கலந்துரையாடலின்போது, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## 60 தமிழ் அரசியல்.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்ததாவது:-

அண்மையில் 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதனை நாங்கள் வரவேற்கிறோம். இது அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தொடக்கப் புள்ளியாக அமையும். அதேநேரம் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். அப்படி ஒரு சம்பவத்தை நாங்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.

11 வருடங்கள் தொடங்கி 26 வருடங்களாக சிறையில் இருக்கும் சிறையிலுள்ள 60 தமிழ் அரசியல் கைதிகளின் பெயர், தண்டனை விபரங்கள், வழக்கு விவரங்கள் போன்ற சகல விவரங்களும் உள்ளடக்கிய கோவையை ,225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாங்கள் அனுப்பி வைத்துள்ளோம் .

விரைவாக அவர்களின் விடுதலை செய்தியை எதிர்பார்த்து இருக்கின்றோம். அந்தவகையில் ,அவர்களுடைய பெற்றோரும் எதிர்பார்ப்புடன் நம்பிக்கையுடன் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். நாடாளுமன்றத்திலே கூறப்பட்ட அந்த விடயங்கள் விரைவாக நடைபெற வேண்டும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

முன்னுக்குப் பின் முரணாக பல மாறுபட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. 60 பேர் தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர். அந்த விவரங்களை நாம் இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். அண்மைக்காலத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உடைய விவரங்களை நாங்கள் தற்போது தயாரித்துக் கொண்டிருக்கின்றோம்.

விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கம், சுமந்திரன் மீதான கொலை முயற்சி காரணமாக கைது செய்யப்பட்டவர்களின் விவரங்களையும் நாங்கள் சேகரித்து வருகின்றோம். அவர்களும் விடுவிக்கப்பட வேண்டும்.

கடந்த காலம் தொட்டு விடுதலை என்று வருகின்றபோது அண்மைக் காலங்களில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர். நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டவர்களை அவ்வாறே சிறையில் முடக்கியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா போல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் அரசியல் கைதிகள் விடயத்தில் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும்.

2009 இற்குப் பின்னர் 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்பட்டனர். அந்தக் காலப்பகுதியில் சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகள் இருந்தனர். ஆனால், இன்றைக்கும் அந்த அரசியல் கைதிகள் அப்படியே தேக்க நிலையிலேயே இருந்து கொண்டிருக்கின்றார்கள். 25 வருடங்களாக அவர்கள் இருக்கின்றார்கள். வயதானவர்கள் கூட அவர்களில் உள்ளனர். அவர்களும் விடுவிக்கப்பட வேண்டும் - என்றார்.

## சபையை..........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இந்தச் சபையில் ஐக்கிய தேசியக் கட்சி 6 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 4 உறுப்பினர்களையும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 3 உறுப்பினர்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன தலா ஓர் உறுப்பினரையும் கொண்டிருந்தன.

இன்றைய வாக்கெடுப்பின்போது, புதிய தவிசாளருக்கு ஆதரவாக 9 வாக்குகளும், எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 4 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த ஒருவரும் ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 5 உறுப்பினர்களும், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர்.

இன்றைய வாக்கெடுப்பு இடம்பெற்ற வேளையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரள, சபையில் பிரசன்னமாகி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மேலும் 50 ஆயிரம்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

செயற்பாடுகள் நிறைவடைந்தவுடன் இவற்றை மக்களுக்கு வழங்கும் பணிகள் ஆரம்பமாகும் என்றும், தடுப்பூசி வழங்கும் மையங்கள் தொடர்பில் அதிகாரிகள் விரைவில் அறிவிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே முதற்கட்டமாக வழங்கப்பட்ட இரண்டு கட்டங்களுக்குமான தடுப்பூசிகளை யாழ்.மாவட்ட மக்கள் ஆர்வத்தோடு பெற்றுக்கொண்ட காரணத்தால், இந்த மேலதிக 50 ஆயிரம் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

மேலும், அடுத்தகட்ட தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும், யாழ். மாவட்ட மக்கள் அனைவருக்கும் தடுப்பூசிகள் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையிலும் உரிய தரப்பினருடன் தொடர்ச்சியாகப் பேசி வருகிறோம் என அவர் மேலும் கூறினார்.

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேவையற்ற தலையீடு

கேட்டாபய ராஜபக்ஷ ஆட்சி பீடம் ஏறிய நாள் தொட்டு எதிலும் இராணுவம், எப்போதும் இராணுவம் என்றாகிவிட்டது.

நாட்டின் சிவில் சேவை அதிகாரிகளின் பதவி நிலைகளில் எல்லாம் ஓய்வுபெற்ற படை அதிகாரிகளை அமர்த்தும் பண்பியல்பு சாதாரணமாகி விட்டது. பேரிடராய் நாட்டைப் பிணித்திருக்கும் கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான பொறுப்பு சுகாதார, மருத்துவ நிபுணர்களிடம் கொடுக்கப்படவில்லை. மாறாக, இவ்விடயத்தில் சுகாதார, மருத்துவ அதிகாரிகளையும் வழிநடத்தும் அதிகாரத்தை இராணுவத்திடம் ஒப்படைப்பது போல, கொவிட் கட்டுப்பாட்டுச் செயலணிக்குத் தலைமை வகிக்கும் அதிகாரம் இராணுவத் தளபதிக்கு – ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு – வழங்கப்பட்டிருக்கின்றது.

அதன் தொடராக மாவட்ட, மாகாண ரீதியிலான கொவிட் தடுப்பு நடவடிக்கைகளின் தலைமைப் பொறுப்புக்களை மாவட்ட, மாகாண கட்டளைத் தளபதிகள் கையில் எடுத்திருக்கின்றார்கள்.

‘நாயின் வேலையை நாய் பார்க்க வேண்டும், கழுதையின் வேலையைக் கழுதை பார்க்க வேண்டும்’ என்பார்கள். மாறிச் செய்தால் என்ன நடக்கும் என்ற கதை நமக்கு தெரிந்ததுதான்.

இங்கு அதுவே நடக்கின்றது.

அண்மையில் வடக்கில் கூட பல இடங்களில் – குறிப்பாக ஆடைத் தொழிற்சாலைகளில் – கொவிட் தொற்றுத் தடுப்பூசி ஏற்றிக் கொண்ட பெரும் எண்ணிக்கையானோருக்கு ஒவ்வாமை மற்றும் மருத்துவப் பாதிப்புக்கள் ஏற்பட்டமை பற்றிய செய்திகள் வெளிவந்தன. சுகாதார, மருத்துவ அதிகாரிகள் தங்களுக்கு விவரம் தெரியாது என கைவிரித்தனர். என்ன, ஏது என்று தேடிப் பார்த்த போது, ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களுக்கு இராணுவம் தானே கொவிட் தடுப்பூசிகளை பொறுப்பேற்று ஏற்றியமை பற்றிய அதிர்ச்சித் தகவல் வெளியானது.

அவ்விவகாரம் பற்றிய உத்தியோகப்பூர்வ முறைப்பாடுகள் குறித்து இப்போது விடயம் வெளியாகி வருகின்றது. கொவிட் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான மருத்துவ அதிகாரிகளின் செயற்பாடுகளில் இராணுவம் அத்துமீறி தலையிடுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சிடம் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்துள்ளது. இப்படியான தலையீடுகள் பெருங்குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும் மருத்துவர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

“குறிப்பாக கிழக்கில் இடம்பெறும் இரண்டு வகையான தலையீடுகளை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். கிழக்கில் கொவிட் தடுப்பூசி நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஏற்றுக் கொள்ள முடியாத வகையில் தலையிடுகின்றனர். முக்கிய சுகாதார நலன் நிலையங்கள், மருத்துவ அதிகாரியின் அலுவலகங்கள் போன்றவற்றுக்குள் எதேச்சிகாரமாக சில இராணுவ அதிகாரிகள் நுழைகின்றனர்” – என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் செனல் பெர்ணாண்டோ கூறியிருக்கின்றார்.

கிழக்கில் தெஹியத்தகண்டிய போன்ற பகுதிகளில் ஆடைத்தொழிற்சாலைகளில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் தம்பாட்டில் மேற்கொண்டு வருகின்றனர் என்று அவர் சுட்டுகின்றார்.

இது அங்கு மட்டுமல்ல வடக்கிலும் கூட தாராளமாக நடக்கின்றது. இங்குள்ள அரச மருத்துவர்கள் எவரும் இந்த விடயத்தை தமது சங்கத்தின் தலைமைக் குழுவிடம் சுட்டிக்காட்டவில்லை போலும். அதனால்தான் கிழக்கில் மட்டும் இது நடைபெறுவது போல் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முறையிட்டிருக்கின்றது.

இராணுவத்தினர் மூலம் தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களில் சுமார் பத்து வீதமானோருக்குத் தடுப்பூசி தொடர்பான மோசமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. இது வழமையான கொவிட் தடுப்பூசி ஏற்றலில் எதிர்கொள்ளும் விளைவுகளுடன் ஒப்பிடுகையில் மிக விபரீதமான நிலைமையாகும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் விசனம் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையில் தேவைப்படும் தடுப்பூசி தாராளமாகக் கிடைக்கவில்லை. தேவையுடன் ஒப்பிடுகையில் மிகச் சொற்பமான எண்ணிக்கையே கிடைத்துள்ளது. அவற்றைச் செலுத்துவதில் தேவையற்ற இராணுவ தலையீடு எதற்காக? இருக்கின்ற – கிடைக்கின்ற – தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு சுகாதாரத்துறை போதுமானதல்ல என்று கருதியா இதற்குள் இராணுவத்தை நுழைக்கின்றீர்கள்? – என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எழுப்பும் கேள்வி நியாயமானதாகவே படுகின்றது.

முதலீட்டுச் சபை கேட்டுக் கொண்டதால் தடுப்பூசி வழங்கும் பணியை இராணுவம் முன்னெடுத்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலாந்த பிரேமரட்ண சப்பைக்கட்டுக் கட்டுகின்றார்.

சுகாதாரத்துறையின் பணியைச் செய்யுமாறு இராணுவத்திடம் ஏன் முதலீட்டுச் சபை கேட்டது? அதை ஏன் இராணுவம் பொறுப்பெடுத்தது?

அரசாட்சியை – அரச நிர்வாகத்தை – இராணுவ மயப்படுத்தும் இந்தப் போக்கு ஜனநாயகத்துக்கு சாவுமணி என்பதை நாடு காலம் பிந்தித்தான் – தலைக்கு மேல் வெள்ளம் போன பின்னர்தான் – உணரும் போல.

# பஸில் நாடாளுமன்று வந்தாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை!

## குமார வெல்கம எதிர்வு கூறல்



பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்குத் திரும்பினாலும், ஒரு வளமான நாட்டை உருவாக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் பேசிய அவர் –

‘2010 – 15 ஆம் ஆண்டில் முந்தைய அரசாங்கத்தில் பஸில் ராஜபக்ஷ இருந்தார் எனவும், அந்த அரசாங்கத்தில் அவர் நிதி மற்றும் பொருளாதார அமைச்சராக இருந்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அந்த அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டதாகவும் குமார வெல்கம தெரிவித்துள்ளார். தற்போதைய அரசாங்கத்திலும் பஸில் ராஜபக்ஷ பொருளாதார மேம்பாட்டுக் குழுவின் தலைவராக செயற்படுகின்றார்.

எனினும், அன்றிலிருந்து அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்றும் குமார வெல்கம கேள்வியெழுப்பியுள்ளார். பஸில் ராஜபக்ஷ திரும்பி வந்தால், நாட்டில் ஒன்று அல்லது இரண்டு சொத்துக்கள் விற்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மேலும் தெரிவித்துள்ளார்.

# சௌபாக்கிய உற்பத்திக் கிராமம் யாழில் நேற்று அங்குரார்ப்பணம்



யாழ்.மாவட்டத்தின் சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்களில் ஒன்றான சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு, பிரான்பற்று கிராமத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் நேற்று(வியாழக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

இதன்போது பாரம்பரிய முறையிலான எள்ளெண்ணெய் உற்பத்தி தொழில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன், பயனாளிகளுக்கான காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக செயலாளர், கிராம சேவையாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும், பிரான்பற்று கிராமத்தின் பயனாளிகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளில் இருந்து இலங்கை வந்த 78 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி

வெளிநாட்டிலிருந்து திரும்பிய 78 இலங்கையர்கள் கொவிட் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். பி.சி.ஆர். சோதனை முடிவுகள் கடந்த புதன்கிழமை பெறப்பட்ட பின்னர் 78 இலங்கையர்களுக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

வெளிநாடுகளில் இருந்து திரும்பிய ஏராளமான இலங்கையர்கள் கடந்த பல வாரங்களாக கொவிட் தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். வளைகுடாவிலிருந்து வரும் பயணிகளுக்கு அரசாங்கம் கடந்த திங்களன்று தடை விதித்தது. எனினும், சில நிபந்தனைகளின் கீழ் இந்த முடிவு ரத்துச் செய்யப்பட்டது.

இதன்படி, கட்டார், ஓமான், பஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த நாடுகளில் இருந்து வரும் அனைத்துப் பயணிகளும் புறப்படுவதற்கு 96 மணி நேரத்திற்குள் எதிர்மறையான பி.சி.ஆர். சோதனை பெற்றிருக்க வேண்டும். பயணிகள் விமானத்தில் ஏறுவதற்கு முன்பு அந்தந்த விமான நிறுவனம் இதை உறுதிப்படுத்த வேண்டும்.

புறப்படுவதற்கு முந்தைய சோதனையாக அன்டிஜென் சோதனைகள் ஏற்றுக்கொள்ளப்படா, பி.சி.ஆர். சோதனை அந்தந்த நாட்டில் உள்ள அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை, ஆய்வகத்திலிருந்து கியு ஆர் குறியீடு, பார் குறியீட்டைக் கொண்டு வழங்கப்பட வேண்டும்.’ என்பது அந்த நிபந்தனைகளாகும்.

# வேகமாகப் பரவுகிறது கொரோனா தொற்று முடக்கப்படும் அபாயத்தில் மேல் மாகாணம்!

மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் கொவிட் தொற்றுப் பரவல் ஏனைய பிரதேசங்களை விடவும் அவதானமிக்க நிலைமையில் உள்ளதாக புதிய சுகாதார அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் வெளியிடப்பட்ட கடந்த 7 நாள் அறிக்கைக்கமைய இந்த விடயம் வெளியாகியுள்ளது.

அவ்வாறான நிலைமையில் டெல்டா வைரஸ் மாறுபாடு தொடர்பில் உரிய பாதுகாப்பின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின அதிகாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் மூலம் எதிர்வரும் நாள்களில் முழு நாட்டுக்கும் மிகவும் அவதானமிக்க நிலைமை ஏற்படும் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தற்போதைய நிலையில் மேல் மாகாணத்தில் தடுப்பூசி போடும் நடவடிக்கைகளை வேகமாக முன்னெடுக்க சுகாதார பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. பொறுப்பற்ற வகையில் செயற்பாடுகள் தொடருமாயின் மேல் மாகாணம் முழுமையாக முடக்கப்படும் அபாயம் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# 96 நாடுகளில் டெல்டா கொரோனா வைரஸ்

## WHO எச்சரிக்கை

கொரோனாப் பரவல் குறித்து ஜுன் 21 - 27 ஆம் திகதி வரையிலான வாராந்திர அறிக்கையை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது. அதில், 'டெல்டா வகை வைரஸ் தற்போது 96 நாடுகளுக்கு பரவியுள்ளது. இது மிக வேகமாக பல நாடுகளுக்கு பரவி வருவதால் வரும் மாதங்களில் அனைத்து வகை வைரஸ்களில் டெல்டா வகையின் ஆதிக்கமே அதிகமாக இருக்கும் என அஞ்சப்படுகிறது.

சமூக இடைவெளி முகக் கவசம் என தற்போதுள்ள பாதுகாப்பு முறை சிறப்பானதாக உள்ளதால் அதையே தொடர வேண்டும். பல நாடுகளில் தடுப்பூசி வழங்கும் பணி மந்தமாக உள்ளது அல்லது தடுப்பூசியே வழங்கப்படாமல் உள்ளது. அதனால் அந்த நாடுகளில் வைரஸ் பாதிப்பு நீண்ட காலம் இருக்கும்.

கொரோனா வகை மாதிரிகள் குறித்து ஆய்வு செய்ய பல நாடுகளில் போதிய வசதி இல்லை. அதனால் டெல்டா வகை வைரஸ் பரவல் அதிக நாடுகளில் இருக்கலாம் என அஞ்சுகிறோம்.

தற்போதைய நிலையில் 'அல்பா' வகை கொரோனா வைரஸ் 172 நாடுகளில் பரவியுள்ளது. 'பீட்டா' வகை வைரஸ் 120 நாடுகளிலும் 'காமா' வகை வைரஸ் 72 நாடுகளிலும் பரவியுள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் டெல்டா வகை வைரஸ் மேலும் 12 நாடுகளுக்கு பரவியுள்ளது' என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

# வாய்க்குப் பூட்டுப்போடும் புதிய கருவி நியூசிலாந்து ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு






நியூசிலாந்தின் OTAGA பல்கலைக்கழக ஆய்வாளர்கள் குழு உடல் எடை குறைப்புக்கான புதிய கருவியை கண்டுபிடித்துள்ளது. இந்தக் கருவியை வாயில் பொருத்தினால், 6 மில்லி மீற்றர் அளவுக்கு மட்டுமே வாயை திறக்க முடியும். ஆனால் வழக்கம்போல பேச முடியும்.

இந்தக் கருவி பொருத்தப்படுவதால் திட உணவுப் பொருள்களை உட்கொள்ள முடியாமல், திரவ உணவுகளை மட்டுமே உட்கொள்ள முடியும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனால், உடல் எடை குறையும் என அவர்கள் கூறுகின்றனர்.

இந்தக் கருவியைப் பொருத்தியவர்களுக்கு இரு வாரங்களில் மூன்றரைக் கிலோ வரை எடை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இந்தக் கருவிக்கு எதிராக, ஏராளமான விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டுவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அன்னிய சக்திகள் எம்மைச் சீண்டினால் பெருஞ்சுவரில் மோதப்படுவார்கள்

## சீன நாட்டு அதிபர் எச்சரிக்கை



சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100ஆவது ஆண்டு விழா, தலைநகர் பீஜிங்கில் உள்ள தியான்மென் சதுக்கத்தில் பிரமாண்டமாக நேற்று நடந்தது. இதில் பேசிய அதிபர் ஷி ஜின் பிங் சீன மக்களை அன்னிய சக்திகள் சீண்டினால், அடிபணிய வைக்க முயன்றால் சீனா தக்க பதிலடி கொடுக்கும் என்று தெரிவித்துள்ளார். அன்னிய சக்திகள் சீனாவை அடக்கவோ, அடிபணிய வைக்கவோ முயன்றால், அதை மக்கள் ஒருபோதும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். தகுந்த பதிலடி கொடுப்போம், எனவும் அந்நாட்டு அதிபர் ஜின்பிங், மறைமுகமாக அமெரிக்காவை எச்சரித்துள்ளார்.

சீன மக்கள், நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றை காப்பதில், அசாதாரண ஆற்றலும் திடமான மன உறுதியும் வலிமையும் மிக்கவர்கள். அவர்களை யாரும் குறைத்து மதிப்பிட வேண் டாம். தேசப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான ஆற்றல் நம்மிடம் உள்ளது. எனினும் நாட்டின் தற்காப்புக்காக இராணுவ பலத்தை மேலும் நவீனப்படுத்த வேண்டும்.

சீனா, எந்தவொரு நாட்டையும் சீண்டியதில்லை. பிற நாட்டு மக்களை அடக்கவோ அல்லது அடிபணிய வைக்கவோ எண்ணியதில்லை. அதுபோல இனி எந்தக் காலத்திலும் சீனா நடந்து கொள்ளாது. அதேசமயம், சீன மக்கள், தங்களை அன்னிய சக்திகள் சீண்டவோ, அடிபணிய வைக்கவோ விடமாட்டார்கள். அதுபோன்ற முயற்சியில் யாராவது ஈடுபட்டால், அவர்களது தலை, 140 கோடி சீன மக்களால் உருவாக்கப்பட்ட இரும்பு போன்ற சீனப் பெருஞ்சுவரில் மோதி தகர்க்கப்படுவது உறுதி.

தாய்வான், சீனாவைச் சேர்ந்தது. தாய்வான் சுதந்திரம் தொடர்பாக எடுக்கப்படும் எந்த முயற்சியையும் நாம் முறியடிக்க வேண்டும். நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு, தேசத்தைப் புதுப்பித்து, பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், சிறுவர், சிறுமியர் உட்பட 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். சமீபகாலமாக கொரோனா விவகாரம், சீனாவின் வர்த்தக ஆதிக்கம், தென் கிழக்கு சீனக் கடல் பகுதியில் சீனாவின் அடாவடி போன்ற விவகாரங்களில் சீனாவுக்கு எதிராக, அமெரிக்கா பல்வேறு நாடுகளை அணி திரட்டி வருகிறது. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாகவே, இந்த நிகழ்ச்சியில் அமெரிக்காவின் பெயரைக் குறிப்பிடாமல் அன்னிய சக்திகள் என மறைமுகமாக ஜின்பிங் பேசியுள்ளார்.

# ஆப்கானிஸ்தான் இராணுவம் வான்வழித் தாக்குதல் 33 தலிபான்கள் சாவு



ஆப்கானிஸ்தான் இராணுவம் வான் வழியாக மேற்கொண்ட தாக்குதலில் 33 தலிபான்கள் பலியாகி உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதல் அந்த நாட்டின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள பால்க் மாகாணத்தில் நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை ஆப்கான் இராணுவமும் உறுதி செய்துள்ளது. இந்தத் தாக்குதலில் தலிபான்கள் கைவசம் இருந்த ஆயுதங்களும் அழிக்கப்பட்டுள்ளன என இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

அந்த நாட்டில் கடந்த மே 1 முதல் அமெரிக்க இராணுவம் தனது படை வீரர்களைத் திரும்பப் பெற்று வருகிறது. அதையடுத்து தலிபான்களின் கை ஓங்கிய நிலையில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது குறித்து தலிபான்கள் எந்தவொரு தகவலையும் இதுவரை வெளியிடவில்லை.

# உலகில் கொரோனாப் பாதிப்பு பிரேஸில் மீண்டும் முதலிடம்


சீனாவின் உகான் நகரில் கடந்த 2019 ஆம் ஆண்டு டிசெம்பரில் முதன் முதலாக வெளிப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று உலக நாடுகளை உலுக்கி வருகிறது. தொற்று பாதிப்பு பரவி ஏறத் தாழ ஒன்றரை ஆண்டுகள் கடந்து விட்டாலும் கூட தொற்றின் வீரியம் குறைந்தபாடில்லை. கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்து பல அலைகளாக தாக்கத்தொடங்கியுள்ளது.

தற்போதைக்கு தடுப்பூசியால் மட்டுமே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறிவருவதால், தடுப்பூசி போடும் பணியும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், உலக அளவில் தினசரி கொரோனா பாதிப்பில் பிரேஸில் மீண்டும் முதலிடத்திற்கு வந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் அந்த நாட்டில் 63,140 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தொற்று பாதிப்பு காரணமாக 1,943 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தப்பட்டியலில் இந்தியா 2 ஆம் இடம் வகிக்கிறது.

உலக அளவில் கொரோனா பாதிப்பு விவரங்களை வெளியிட்டு வரும் வோர்ல்டோ மீட்டர்ஸ் தரவுகளின்படி, இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 43,360 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.





## தமிழ் நாட்டின் 17 மாவட்டங்களில்
# கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரிப்பு

தமிழ்நாட்டில் நேற்று புதிதாக 4,506 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதில் அதிகபட்சமாக கோவை மாவட்டத்தில் 514 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த பாதிப்பு ஒவ்வொரு நாளும் குறைந்து வந்தாலும் 17 மாவட்டங்களில் நேற்று முன்தினத்தின் தொற்று எண்ணிக்கை விட நேற்று அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. திருவெண்ணாமலை, திருச்சி, தூத்துக்குடி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் தொற்று எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

ஊரடங்குத் தளர்வுகளால் மக்கள் பரவலாக நடமாடத் தொடங்கியிருப்பது மீண்டும் தொற்றை அதிகரிக்கச் செய்திருக்கலாம் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அரசு மருத்துவர்களின் ஊதியப் பிரச்சினையை தீர்க்குக

## தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்த கமல்ஹாசன்




தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டிருந்தார். அதில், 'கொரோனாப் பெருந்தொற்று தீவிரமடைந்த சூழலில் ஓராண்டுக்கும் மேலாக உயிரைப் பணயம் வைத்து தன்னலமற்ற சேவையாற்றி வருகிறார்கள் நமது மருத்துவர்கள். அவர்கள் அனைவருக்கும் மருத்துவர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுகாதாரத்துறையில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாகத் திகழும் தமிழ்நாட்டில்தான், அரச மருத்துவர்களுக்கு மற்ற மாநிலங்களைவிட குறைவாக ஊதியம் வழங்கப்படும் நிலையும் உள்ளது.

நீதிமன்ற குமாஸ்தாவின் ஊதியத்தைவிட அரச மருத்துவர்களின் ஊதியம் குறைவாக இருக்கிறதே என்று உயர் நீதிமன்றமே வேதனையுடன் குறிப்பிட்டது. அரச மருத்துவர்களுக்கு உரிய ஊதியம் தரப்படவேண்டும் என்று உயர் நீதிமன்றம் பல முறை வலியுறுத்தியும், மாநில அரசு அதைக் கண்டுகொள்ளவில்லை.

அரச மருத்துவர்களுக்கு ஊதிய உயர்வை மறுஆய்வு செய்வது தொடர்பாக, 2009 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி 2017 ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய மறுஆய்வு நடைபெறவில்லை. ஊதிய உயர்வு கிடைக்காததால் 2018 இல் போராட்டங்கள் நடைபெற்றன.

அரச மருத்துவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று தெரிவித்து அதை செயல்படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. கடந்த சில நாள்களுக்கு முன்பு வெளியாகியுள்ள அரசாணை எண் 293 இன் படி மருத்துவப் பணியா ளர்களுக்கான ஊதியப் படிகளை மட்டுமே வழங்கி யிருக்கிறது. இதனால் கிராமப்புறங்களில் உள்ள மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் இல்லை. ஊதியப் படிகளும் குறிப்பிட்ட துறைகளுக்கான மருத்துவர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளன. பல மருத்துவ சங்கங்கள் ஊதியப் படியை மறுத்து ஊதிய உயர்வையே வலியுறுத்தியுள்ளன. தற்போது உள்ள 8, 15, 17, 20 ஆண்டுகள் முடிந்து கொடுக்கப்படும் 'காலம் சார்ந்த ஊதிய உயர்வை' 5, 9, 11, 12 ஆண்டுகள் என மாற்றி கொடுக்கும் வகையில் 2009 ஆம் ஆண்டின் அரசாணை எண் 354 ஐ உடனடியாக செயல்படுத்த வேண்டும் என அரச மருத்துவர்கள் பல ஆண்டுகளாக மன்றாடி வருகின்றனர். அரசு மருத்துவர்களின் கோரிக்கையை கவனத்தில் கொள்ளாமல், தமிழ்நாடு அரசு சிலருக்கு மட்டுமே ஊதியப்படிகளை வழங்கியிருப்பது ஏமாற்றமளிக்கிறது. இரவு பகல் பாராமல் உழைக்கும் அரச மருத்துவர்களின் இன்னல்களைக் கருத்தில் கொண்டு அவர்களது கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்ற வேண்டும்' என்று கமல்ஹாசன் கோரி யிருக்கிறார்.




# அ.தி.மு.க. அலுவலகம் அருகாமையில் சசிகலாவுக்கு ஆதரவாக சுவரொட்டிகள்

## கட்சியைக் கைப்பற்றும் முனைப்பில் தீவிரம்!

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சசிகலா இந்த ஆண்டு ஜனவரி மாதம் விடுதலையானார். சிறையிலிருந்து விடுதலையடைந்த அவர், அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறேன் என அறிவித்தார்.

ஆனால், நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று அ.தி.மு.க. ஆட்சியை இழந்ததையடுத்து, அ.தி.மு.க. தொண்டர்களுடன் சசிகலா தொலைபேசியில் பேசும் ஓடியோக்கள் தினசரி வெளியாகிவந்தன. அது தமிழ்நாட்டு அரசியலில் அவ்வப்போது பரபரப்பை ஏற்படுத்தி வந்தது. இதற்கிடையில், சசிகலாவுடன் தொலைபேசியில் பேசிய 15 இற்கும் மேற்பட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். சசிகலாவுக்கு எதிராக ஒவ்வொரு மாவட்ட அ.தி.மு.க. அலுவலகத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இருப்பினும் சசிகலா தொடர்ந்து அ.தி.மு.க. தொண்டர்களிடம் பேசிவருகிறார். மேலும், அந்த ஓடியோ விவரங்களும் சமூக வலைத் தளங்களில் வெளியிடப்பட்டு வருகின்றன. இது குறித்து செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, 'தினமும் ஆயிரம் பேரிடம் பேசினாலும் கவலையில்லை' என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சசிகலாவின் அபிமானிகள் அவருக்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டிவருகின்றனர். குறிப்பாக நேற்று, எடப்பாடி பழனிசாமி கட்சியின் நிலைமைகள் தொடர்பாக முக்கியஸ்தர்களுடன் ஆலோசனை செய்யவுள்ளார் என்ற தகவல் அறிந்து அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தை அண்டிய பகுதிகளிலும் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. 'கழகமும் நீங்களே..! எங்கள் காப்பகமும் நீங்களே...!' என்று வாசகங்களைத் தாங்கிய சுவரொட்டிகள் அ.தி.மு.க. அலுவலகத்தின் அருகே ஒட்டப்பட்டிருந்தன. அதேபோல, மதுரை புறநகர் பகுதியிலும் சசிகலாவுக்கு ஆதரவாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

# இந்தியாவை ஒன்றிய அரசென அழைக்கக்கூடாது என்று முதல்வருக்கு உத்தரவிட முடியாது

## பொதுநல வழக்கை தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம்

இந்திய அரசை, ஒன்றிய அரசு என அழைக்கும் தமிழக அரசின் பேச்சிற்கும், எழுத்திற்கும் இடைக்கால தடை விதிக்க வேண்டும் என்று தொடரப்பட்ட மனுவை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை தள்ளுபடி செய்துள்ளது. தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றது.

அதனையடுத்து, மே 7 ஆம் திகதி மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. அரசு பதவியேற்றது. மு.க.ஸ்டாலின் முதல்வராக பொறுப்பேற்றதிலிருந்து மத்திய அரசு என்பதை ஒன்றிய அரசு என்றே குறிப்பிட்டுவருகின்றார். அவர் மட்டுமல்லாது அமைச்சர்கள், தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அனைவரும் ஒன்றிய அரசு என்றே அழைத்துவருகின்றனர்.

தமிழ்நாட்டு அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பிலும் மத்திய அரசினை, ஒன்றிய அரசு என்றே குறிப்பிடுகின்றனர்.

தி.மு.கவின் கூட்டணிக் கட்சியினரும் ஒன்றிய அரசு என்றே அழைக்கின்றனர். ஆனால், தி.மு.கவின் ஒன்றிய அரசு என்ற சொற் பிரயோகத்துக்கு பா.ஜ.க. எதிர்ப்பு தெரிவித்துவருகிறது. மத்திய அரசு என்று அழைக்க வேண்டும் என்று பா.ஜ.க. வலியுறுத்திவருகிறது. ஒன்றிய அரசு என்ற சொற்பிரயோகத்துக்கு எதிராக வழக்குத் தொடர்வோம் என்று பா.ஜ.க. பொதுச் செயலாளர் கரு.நாகராஜன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், 'மத்திய அரசை, ஒன்றியம் என அழைக்கப்படுகிறது, ஆளுநர் உரையில் ஜெய்ஹிந்த் என்ற வார்த்தை விடுபட்டு உள்ளது. இது போன்ற தேசபக்தியற்ற அரசியலமைப்பிற்கு எதிரான செயல்கள் சட்டசபையில் நடைபெறுகின்றன. இந்திய அரசை, ஒன்றிய அரசு என அழைக்கும் தமிழக அரசின் பேச்சிற்கும், எழுத்திற்கும் இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்றும், மேலும், நம் நாட்டை, இந்தியா அல்லது பாரதம் என்று அழைக்க உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும் பழனியைச் சேர்ந்த வழக்கறிஞர் ராமசாமி என்பவர் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் பொது நல வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது அதனை விசாரித்த நீதிபதிகள், 'தமிழக முதல்வரும் அமைச்சர்களும் இவ்வாறுதான் பேசவேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட இயலாது.

தடுப்பூசி செலுத்துங்கள் என விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். ஆனால், கட்டாயம் என உத்தரவிட முடியாது. காரணம் தனி மனித உரிமை' என்று கூறி அந்த மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது ரி-20 தொடரைச் சமன்செய்தது மேற்கிந்தியத் தீவுகள்



தென்னாபிரிக்க அணிக்கெதிரான நான்காவது ரி-20 போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 21 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலை பெற்றுள்ளது. சென்ட்.ஜோர்ஜில் நடைபெற்ற இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி தனக்கான 20 ஓவர்கள் நிறைவில் 6 விக் கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பொலார்ட் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் லெண்ட்ல் சிமொன்ஸ் 47 ஓட்டங்களையும்எடுத்தனர். தென்னாபிரிக்க அணியின் டப்ரைஸ் சம்ஸியும் ஜோர்ஜ் லிண்டேயும் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 168 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணியால்,20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணி 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்க அணியின் குயிண்டன் டி கொக் 60 ஓட்டங்களை எடுத்திருந்தார். மேற்கிந்திய தீவுகள் அணியின் டுவைன் பிராவோ 4 விக்கெட்டுக்களையும் அன்ட்ரே ரஸல் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் பொலார்ட் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும் தொடரைக் கைப்பற்றும் அணியைத் தீர்மானிப்பதுமான ரி-20 போட்டி நாளை நடைபெறவுள்ளது.



# இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து 8 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி!

## ஒருநாள் கிரிக்கெட் தொடரையும் இழந்தது இலங்கை அணி

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரை ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையிலேயே 2-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

லண்டன்ஓவல்மைதானத்தில்நடைபெற்றஇந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9விக்கெட்டுக்களைஇழந்து241ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டது. தனஞ்சய டி சில்வா 91 ஓட்டங்களையும் தசுன் சானக 47 ஓட்டங்களையும் எடுத்தனர். இங்கிலாந்து அணியின் சாம் கரன் 5 விக்கெட்டுகளையும் டேவிட் வில்லி 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

242 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி, 43 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. ஜேஸன் ரோய் 60 ஓட்டங்களையும், ஓய்ன் மோர்கன் 75, ஜோ ரூட் 68 ஓட்டங்களை ஆட்டமிழக்காதும் பெற்றனர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக சாம் கரன் தெரிவானார்.

இவ்விரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டி, நாளை மறுதினம் பிரிஸ்டலில் நடைபெறவுள்ளது.

# யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் இன்று இரண்டு காலிறுதி ஆட்டங்கள்

## முதலாவது காலிறுதியில் ஸ்பெயினும் சுவிட்ஸர்லாந்தும் மோதுகின்றன

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் இலங்கை நேரப்படி இரவு 9.30 க்கு ஆரம்பமாகும் முதல் காலிறுதிப் போட்டியில் முன்னாள் சம்பியன் ஸ்பெயின் அணி, சுவிட்ஸர்லாந்தை எதிர்கொள்கிறது.

யூரோ கால்பந்தாட்ட வரலாற்றில் முதல்முறையாக காலிறுதிக்குள் வந்துள்ள சுவிட்ஸர்லாந்து அணி, முந்தைய சுற்றில் பிரான்சை பெனால்டி ஷூட்-அவுட்டில் வீழ்த்தியதால் மிகுந்த நம்பிக்கையுடன் களம் காணும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால், இரண்டு மஞ்சள் அட்டை பெற்ற அந்த அணியின் கப்டன் கிரனிட் ஸாகா ஆட முடியாமல் போவது கொஞ்சம் பின்னடைவாகும்.

முன்னாள் சம்பியனான ஸ்பெயின் அணி தனது கடைசி இரு ஆட்டங்களில் சுலோவக்கியா மற்றும் குரோஷியாவுக்கு எதிராக தலா 5 கோல்கள் போட்டு மிரள வைத்தது. பொதுவாக பந்தை தங்களுக்குள்ளே அதிக நேரம் வைத்துக் கொள்ளும் வகையில் தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தும் ஸ்பெயின் அணியினர் இப்போது தாக்குதல் பாணியை கையில் எடுத்திருப்பது எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

இவ்விரு அணிகளும் இதுவரை 22 ஆட்டங்களில் நேருக்கு நேர் சந்தித்துள்ளன. இதில் 16 இல் ஸ்பெயினும், ஒன்றில் சுவிட்ஸர்லாந்தும் வெற்றி பெற்றுள்ளன. எஞ்சிய 5 ஆட்டங்கள் சமநிலையில் முடிந்துள்ளன. சுவிட்ஸர்லாந்துக்கு அந்த ஒரே ஒரு வெற்றி 2010 ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டியில் கிடைத்தது.



# இரண்டாவது காலிறுதியில் பெல்ஜியம் - இத்தாலி அணிகள் மோதல்!



யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் இலங்கை நேரப்படி நாளை அதிகாலை 12.30க்கு ஆரம்பமாகவுள்ள மற்றொரு காலிறுதியில் முதல் நிலை அணியான பெல்ஜியம், நான்கு முறை உலக சம்பியனான இத்தாலியை எதிர்கொள்கிறது. இவ்விரு அணிகளும் தற்போதைய தொடரில் இதுவரை ஆடியுள்ள 4 ஆட்டங்களிலும் வெற்றி கண்டு தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளன.

இத்தாலி அணி தான் விளையாடிய இறுதி 31 சர்வதேசப் போட்டிகளில் தோல்வியையே சந்திக்காமல் வீறுநடை போட்டு வருகிறது. அந்த அணியில் போனுக்சி, மானுல் லொகடெலி, இமொபைல், இன்சைஜ், பெடரிகோ சீஸா, பெசினா உள்ளிட்டோர் பிரமாதமான ஆற்றலோடு உள்ளனர்.

அதே சமயம் பெல்ஜியம் அணிக்கு திடீர் பின்னடைவாக மத்தியகள வீரர் கெவின் டி புருனே, கப்டன் ஈடன் ஹசார்ட் இருவரும் காயத்தில் சிக்கியுள்ளனர். நேற்று அவர்கள் பயிற்சியிலும் ஈடுபடவில்லை. இதனால், இந்த ஆட்டத்தில் அவர்கள் இறங்குவது சந்தேகமாகியுள்ளது.

இருப்பினும் முந்தைய சுற்றில் கிறிஸ்டியானா றொனால்டோ தலைமையிலான போர்த்துக்கலை பதம் பார்த்ததால் அதே உத்வேகத்துடன் களமிறங்குவார்கள் என்று நம்பலாம்.

இரு அணிகளும் ஏறக்குறைய சரிசம பலத்துடன் இருப்பதால் யாருடைய கை ஓங்கும் என்பதை கணிப்பது கடினம். 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெல்ஜியம் அணி யூரோ கால்பந்தில் அரையிறுதியை எட்டியதில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது. இவ்விரு அணிகளும் 22 முறை இதற்கு முன்பு மோதியுள்ளன. இதில் நான்கில் பெல்ஜியமும், 14 இல் இத்தாலியும் வெற்றி கண்டுள்ளன. 4 ஆட்டங்கள் சமநிலையில் முடிந்துள்ளன

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவ முன்வரும் நாடுகளை நாம் வரவேற்போம்



## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுவதற்கு முன்வரும் நாடுகளை இலங்கை வரவேற்கும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.


சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் மக்கள் மயப்படுத்தப்படவுள்ள மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு நேற்று (வியாழக்கிழமை) விஜயம் செய்த அமைச்சர் அங்கு விமான நிலையத்தின் பணிகளை பார்வையிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் விமானப் போக்குவரத்தை இலகுபடுத்தி சுற்றுலாப்பயணிகளின் வருகையை அதிகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விஜயத்தில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் சுற்றுலாத்துறை அதிகாரிகளும் இணைந்திருந்தனர்.

மட்டக்களப்பு விமான நிலையத்துக்கு அதிகளவான விமானங்கள் வந்துசெல்லவும் குறைந்த செலவில் விமானப்பயணங்களை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

## கொழும்பில் 24 மணித்தியாலங்களில் 365 பேருக்கு கொரோனாத் தொற்று



நாட்டில் நேற்றுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் அடையாளங்காணப்பட்ட ஆயிரத்து 864 கொரோனா நோயாளர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர்

அதன்படி, 24 மணித்தியாலங்களில் கொழும்பு மாவட்டத்தில் 365 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, கம்பஹா மாவட்டத்தில் 221 பேருக்கும் கண்டி மாவட்டத்தில் 81 பேருக்கும் யாழ். மாவட்டத்தில் 23 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல புத்தளம் மாவட்டத்தில் 33 பேருக்கும் அம்பாறை மாவட்டத்தில் 45 பேருக்கும் நுவரெலியா மாவட்டத்தில் 97 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறே, பதுளை மாவட்டத்தில் 40 பேருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 100 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 06 பேருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐவருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் 07 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 07 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் 08 பேருக்கும் இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு அருகில் நில அதிர்வு கண்காணிப்பு கருவி பொருத்தல்

விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் 10 புதிய நில அதிர்வு கண்காணிப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் பதிவாகியிருந்த நில அதிர்வுகளின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு, புதிய நில அதிர்வு கண்காணிப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன என சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நில அதிர்வு கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டதால், விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் ஏற்படக்கூடிய அதிர்வுகளை முன்னரைவிட சிறப்பான முறையில் கண்காணிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு முதல் கண்டியில் உள்ள திகன, தெல்தெனிய மற்றும் குண்டசாலை ஆகிய இடங்களில் பல நில அதிர்வுகள் பதிவாகியிருந்தன.

நில அதிர்வு தொடர்பாக ஆராய்ந்து, அறிக்கையை சமர்ப்பிக்க சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர நிபுணர்களின் குழுவை நியமித்தார்.

இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நில அதிர்வுகள் விக்டோரியா நீர்த்தேக்க அணையை பாதிக்கவில்லை, இருப்பினும் ஒரு விரிவான ஆய்வு தேவை என குறித்த குழுவினர் தெரிவித்தனர்.

அதன் பின்னர், சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் விக்டோரியா நீர்த்தேக்கத்தின் அணை குறித்து விரிவான ஆய்வை மேற்கொண்டது.

ஆயிவின் முடிவில், குறைந்தது ஆறு மாத நில அதிர்வுத் தரவைப் பெறுவதற்கு இப்பகுதியில் குறைந்தது 10 உயர் நில அதிர்வு கண்காணிப்பு கருவிகளை நிறுவ பரிந்துரைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தொடர்பாடலை மேம்படுத்தும் இணைப்பு செயலி வடிவமைத்தார் முன்னாள் போராளியின் மகன்!

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பொன்னகர் கிராமத்திலுள்ள புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியின் மகனான சுபாஸ்சந்திர போஸ் சுகிர்தன் என்ற கலைப்பிரிவு மாணவன் இணைப்பு செயலி ஒன்றை வடிவமைத்துள்ளார்.

குறித்த செயலியை வடிவமைக்க ஆரம்பித்தபோது, அதற்கான பெயரிடலை திட்டமிடாமையால் தனது பெயரை அதற்கு சூட்டியுள்ளார்.

குறித்த செயலி ஊடாக பயன்பாட்டில் உள்ள ஏனைய செயலிகள் போன்று, தரவுகளை பரிமாறுதல், காணொலி தொடர்பாடல் உள்ளிட்ட விடயங்கள் அதில் உள்ளடங்கியுள்ளன என அவர் தெரிவிக்கின்றார்.

மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள சிவபாதகலையகம் பாடசாலையில் சாதாரண தரம் வரை



கல்வி கற்று தற்போது கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கலைப்பிரிவில் உயர் கல்வியைத் தொடர்ந்து வருகின்றார்.

தாம் ஆரம்பக் கல்வியை பயின்ற பாடசாலையில் பல்வேறு வளக் குறைபாடுகள் காணப்பட்டன எனவும், உயர்தரம் வரை இல்லாது சாதாரண தரம் வரை உள்ள நிலையில் வளக் குறைபாடுகள் குறித்த பாடசாலையில் காணப்பட்டன எனவும் தெரிவித்தார்.

தற்போது உயர்தரக் கல்விக்காக கிளிநொச்சி நகரிலுள்ள கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வருகிறார் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களிலிருந்து தொழில்நுட்ப வளர்ச்சி நோக்கி பயணிக்கும் இவ்வாறான மாணவர்களைத் தட்டிக்கொடுக்க முன்வருவதில்லை எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறான தொழில்நுட்ப விடயங்களை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு கணினி வசதியோ பொருளாதார வசதியோ தமக்கு இல்லை எனவும், அவ்வாறான உதவிகள் கிடைக்குமிடத்து தொழில்நுட்ப விடயங்களை முன்னோக்கிக் கொண்டு செல்லலாம் எனவும் அந்த மாணவன் தெரிவிக்கின்றார்.

## தங்கத்துக்கு திடீர் தட்டுப்பாடு

நாட்டில் தங்கத்திற்கு கடுமையான தட்டுப்பாடு நிலவி வருவதாக அகில இலங்கை தங்க ஆபரண சங்கம் தெரிவித்துள்ளது.

தங்கத்தை இறக்குமதி செய்வதற்கு கடுமையான வரையறைகள் பிறப்பிக்கப்பட்டுள்ள காரணத்தால் இவ்வாறு தங்கத்துக்குக் கடுமையான தட்டுப்பாட்டு நிலைமை உருவாகியுள்ளது.

தங்கத்துக்கான தட்டுப்பாடு காரணமாக தங்க ஆபரணத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றமையுடன் ஆயிரக்கணக்கானவர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர். அகில இலங்கை தங்க ஆபரண சங்கத்தின் தலைவர் ஏ.விஜயகுமார் இந்த விடயத்தை ஊடகங்களிடம் நேற்று (வியாழக்கிழமை) தெரிவித்துள்ளார்.

நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் தங்கம் இறக்குமதி செய்ய பிறப்பிக்கப்பட்ட வரையறைகள் தொடர்ந்தும் அமுலில் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 500 ரூபாவாகவும் செய் கூலியுடன் ஒரு பவுண் நகையை ஒரு லட்சத்து 24 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் விஜயகுமார் குறிப்பிட்டுள்ளார்.

## டெல்டாவை எதிர்த்துப் போராடுவதற்கான சரியான திட்டத்தை அரசு திட்டமிடவில்லை

### பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கம் சுட்டிக்காட்டு

டெல்டா என அழைக்கப்படும் பயங்கரமான இந்திய மாறுபாட்டு வைரஸை எதிர்த்துப் போராடுவதற்கான சரியான திட்டத்தை அரசாங்கம் இதுவரை திட்டமிடவில்லை என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ள அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, கொரோனா பரவல் நாட்டில் தொடங்கியதிலிருந்து பின்பற்றி வரும் செயற்திட்டத்தையே அரசாங்கம் தொடர்கிறது என் றும் இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ள புதிய செயற்திட்டத்தை முன்னெடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பல பகுதிகளில் பரவியிருக்கும் இந்திய மாறுபாடு நாட்டில் அதிகமான பகுதிகளுக்குப் பரவியுள்ளதா என்பதைத் தீர்மானிக்க சரியான ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பை மேற்கொள்வது மிகவும் முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரியான செயற்திட்டம் எதுவும் இல்லை என்றால், சில வாரங்களுக்கு முன்பு இந்தியா அனுபவித்ததை இலங்கை விரைவில் அனுபவிக்கும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கம் நிலைமையை இன்னும் தீவிரமாக எடுத்துக்கொள்ளாவிட்டால் ஒரு பெரிய அழிவைத் தவிர்க்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில், கடந்த சில நாள்களில் மக்களின் நடத்தை மிகவும் ஏமாற்றமளிக்கும் விதமாக மோசமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் – 19 இன் ஆபத்து சமூகத்திலிருந்து மறைந்துவிட்டதைப் போல மக்கள் நடந்துகொள்கிறார்கள் என்றும் ஆபத்து இன்னும் வீரியமாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.07.2021 இல் வெளியிடப்பெற்றது.